[2019] 5 எஸ்.சி.ஆர். 1131

மணி

–எதிர்–

கேரள மாநில அரசு மற்றும் பலர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்.540/2019)

ஏப்ரல் 01, 2019

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்சய ஒய். சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா

தண்டனைச் சட்டம் 1860

பிரிவு 300, விதிவிலக்கு 4, பிரிவு 304 (பகுதி 1) – ஏழு குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் மீதான குற்றச்சாட்டு – ஒரு நபருக்கு மரணத்தை விளைவித்து, எட்டு நபர்களுக்கு காயங்கள் ஏற்படுத்தியதற்காக – விசாரணை நீதிமன்றம், காயமடைந்த கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தை சார்ந்திருந்து இ.த.ச. பிரிவுகள் 302, 341 மற்றும் 324 உ/இ பி. 34–ஆகியவற்றின் கீழ் 1 முதல் 4 வரையிலான குற்றஞ்சாட்டப்பட்டவர்களை தண்டித்தது – எதிரிகளில் மூன்று பேர் விடுதலை செய்யப்பட்டனர் – பிரிவு 302–ன்கீழ் எதிரி எண்–1 (மேல்முறையீட்டாளர்)ன் தண்டனையையும், பி–324 மற்றும் 341 உ/இ பி. 34–ன் கீழ் எதிரி எண் 2 லிருந்து 4

வரை உள்ளவர்களின் தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது – பிரிவு 302–ன் கீழ் தனக்களிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து முதலாவது எதிரி உச்சநீதிமன்றத்தில் செய்த மேல்முறையீடு, பிரிவு 302–ன் கீழ் 2 முதல் 4–வது எதிரிகளின் விடுதலையை எதிர்த்து, அரசு உச்ச நீதிமன்றத்தில் செய்த மேல்முறையீடு – முடிவு: மரணம் விளைவிப்பதில் பொது நோக்கம் இல்லை – தகராறின் தொடக்கம் நிரூபிக்கப்படவில்லை – சாட்சிகளின் காயங்கள் சம்பந்தமான வாக்குமூலம் போதுமானதாக இல்லை – தற்காப்பு வாதுரை நிருவப்படவில்லை – இருப்பினும், மேல்முறையீட்டாளர்/எதிரியால் மரணம் ஏற்பட்டது என்று அனைத்து எதிரிகளும் ஒருமித்து சான்றுரைத்தனர் – இது முன்திட்டமிடுதலின்றி ஏற்பட்ட திடீர் சண்டை – எனவே, இது பிரிவு 300, விதிவிலக்கு 4–இல் வருகின்ற கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் – எனவே பிரிவு 304 (பகுதி 1)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் நிருவப்படுகிறது – ஏற்கனவே அனுபவித்துள்ள தண்டனைக் காலமான அதாவது ஏழு வருடங்களுக்கு மேல் உள்ள காலம் மாற்றியமைக்கப்படுகிறது.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்த இந்நீதிமன்றம் மாநில அரசின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்மானித்ததாவது:

1. மரணத்தை ஏற்படுத்தியதில் எந்த பொது நோக்கும் இல்லை என்று உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில்

பிழை ஏதும் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில், எதிரிகள் இருந்ததாகவோ அல்லது அவர்கள் அந்த இடத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கான எந்த ஆதாரத்தையோ அரசு தரப்பு முன்வைக்கவில்லை. எனவே அரசு தரப்பால் தகராறின் தொடக்கம் நிரூபிக்கப்படவில்லை. காயங்கள் குறித்த சாட்சிகளின் வாக்குமூலம் பொருத்தமானதாக இல்லை. மேல்முறையீட்டாளர் இறந்தவரை மற்றும் அவர் மற்றவர்களை தாக்கும்படி தூண்டினார்.

2. மேல்முறையீட்டாளர் தற்காப்பிற்காக செயல்பட்டார் என்ற வாதுரை நிறுவப்படவில்லை. மேல்முறையீட்டாளர் அடைந்த காயம் கடுமையானதல்ல, அத்தகைய காயம் மரணத்தை விளைவிக்கும் என்பதால் முக்கிய பகுதியான மார்பில் மரணமுற்றவரை அவர் தாக்கியிருக்க முடியாது. தேவையான அளவு தீங்கு எற்படவில்லை. தற்காப்புரிமையின் உரிமையை செயல்படுத்துவதற்கு தேவையான அளவை விட மேல்முறையீட்டாளர் அதிக காயம் ஏற்படுத்தி உள்ளதால், தற்காப்புரிமையின் உரிமைக்கு அவர் உரியவரல்ல.

3. எதிரிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையே அரசியல் முரண்பாடை தவிர தனிப்பட்ட விரோதம் ஏதும் இல்லை என்றும், மேல்முறையீட்டாளர் பாதிக்கப்பட்டோரை திடீரென்று எதிர்கொண்டார் என்றும், அப்போது ஏற்பட்ட சண்டையினால் இறந்தவர் மீதும், மற்ற பாதிக்கப்படவர்கள் மீதும் காயங்கள்

ஏற்பட்டது என்று அரசு தரப்பு சாட்சிகள் வாக்குமூலம் அளித்துள்ளனர். முன்திட்டமிடுதல் ஏதுமின்றி ஏற்பட்ட திடீர் சண்டையை கருத்தில் கொண்டு பார்க்கையில், இ.த.ச., பிரிவு 302 – ன் கீழான குற்றத்திற்கு மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை நிரூபிக்கப்படவில்லை. இறந்துபோன சோமனின் மார்பில் கத்திக்குத்து ஏற்பட்டதன் காரணமாகவே அவருக்கு மரணம் ஏற்பட்டது. அவ்வாறான காயம், மரணம் விளைவிக்கும் உட்கருத்து ஏதுமின்றி, மரணம் ஏற்படுத்தக்கூடும் என்று அறிந்தே புரியப்பட்டது. எனவே, திடீர் சண்டையின் காரணமாக ஆத்திரமடைந்து ஏற்பட்ட மரணம் இ.த.ச., பிரிவு 300 விதிவிலக்கு 4–ன் கீழ் வருகின்ற கொலைக்குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றமாகும். எனவே, அது இ.த.ச., பகுதி I பிரிவு 304–ன் கீழான தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

4. மேல்முறையீட்டாளர், விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையில் ஏழு வருடங்களுக்கு மேல் அனுபவித்துள்ளார். எனவே, நிகழ்ந்த சம்பவத்தின் பின்புலம் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கையில், மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தண்டனையானது, ஏற்கனவே அனுபவித்துள்ள தண்டனையை மாற்றியமைக்கும்படியும், ரூ.20,000/–திற்கான அபராதத்தை நிலைநிறுத்தும்படியும் நாங்கள் முடிவு செய்கிறோம்.

தரம் பால் மற்றும் பலர் –எதிர்– ஹரியானா மாநில அரசு **ஏ.ஐ.ஆர்.1978 எஸ்.சி. 1492 :** நந்த கிஷோர் – எதிர்– மத்திய பிரதேச மாநிலம் **ஏ.ஐ.ஆர். 2011 எஸ்.சி. 2775 : [2011] 7 எஸ்.சி.ஆர். 1152 – குறிப்பிடப்பட்டது.**

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

ஏ.ஐ.ஆர்.1978 எஸ்.சி. 1492	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 15**
[2011] 7 எஸ்.சி.ஆர். 1152	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 15**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.540/2019.

எர்ணாகுளத்திலுள்ள கேரள உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீடு எண்.2149/2011–இல் 02.02.2016 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

குற்றவியல் மேல்முறையீடு எண்.541/2019.

பசந்த் ஆர்.கே.என். பாலகோபால், மூத்த வழக்கறிஞர்கள் ரகேந்த் பசந்த், செந்தில் ஜெகதீசள், ஜி.பிரகாஷ், ஜிஷ்ணு எம்.எல், Ms. நித்யா நம்பியார், ரெஞ்சித் பி. மாறர், Ms. லக்ஷ்மி என். கைமல், ஏ. கார்த்திக், பாதுஷா சுலைமான், நமீதா வலி, ராகவ் மெஹ்ரோத்ரா, Ms. லிஸ் மாத்யூ ஆகியோர் தரப்பினருக்காக ஆஜராகும் வழக்கறிஞர்கள்.

நீதியரசர் ஹேமந்த் குப்தா அவர்களால் நீதிமன்றத்தின் தீர்ப்புரை பகரப்பட்டது.

1. 02–02–2016 தேதியிட்ட தீர்ப்புரையில், இ.த.ச. பிரிவு 302 –ன்கீழ் மேல்முறையீட்டாளர் மணி தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதை நிலைநிறுத்தி, எதிரி–2 ரத்னகுமார், 3–பிரவீன், 4 – செல்வராஜ் ஆகியோருக்கு இ.த.ச. பிரிவுகள் 324, 341 உ/இ பி. 34–ன் கீழ் உள்ள குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனையை நிலைநிறுத்தி, அவர்களை இ.த.ச., பிரிவு 302–ன்கீழ் விடுதலை செய்ததை எதிர்த்து, தற்போதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்றவியல் மேல்முறையீடு எண் 540/2019 ஆனது, இ.த.ச. பிரிவு 302–ன் கீழான குற்றத்திற்காக 1–ஆம் எதிரியின் தண்டனைத் தீர்ப்பிற்கு எதிராகவும், குற்றவியல் மேல்முறையீடு எண் 541/2019–ஆனது, இ.த.ச. பி.302 உ/இ பி. 34–ன்கீழ் எதிரி எண். – 2 – ரத்னகுமார், 3–ப்ரவீன் மற்றும் 4–செல்வராஜ் (எதிர் மனுதாரர்கள் 2–4) ஆகியோருக்கு வழங்கப்பட்ட விடுதலையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது. இதிலுள்ள தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் உள்ளது போல் குறிப்பிடப்படுவர்.

3. சோழியங்கோட்டு, ரோஸி பள்ளி அருகில் உள்ள சரிவில் 28.09.2005 –அன்று இரவு சுமார் 8.10 மணியளவில் நடந்த சம்பவம் தொடர்பாக அதே நாள் சுமார் 11.00 மணி அளவில், அ.சா. 2 விஸ்வநாதன் த/பெ குஞ்சு, முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்தார். வழக்கு விவரம் யாதெனில், பி.ஜே.பி. ஆதரவாளர்களான 1 முதல் 4 வரையிலான எதிரிகள், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக புகார்தாரரையும் மற்ற சி.பி.எம் ஆதரவாளர்களையும் கொல்லும் நோக்கத்துடன் கூட்டு சதி தீட்டி ஒன்றிணைந்து, ஆபத்து மிக்க ஆயுதங்களான கத்தி, வடிவால் மற்றும் இரும்பு கம்பி ஆகியவற்றை சேகரித்து சோழியங்கோடு, ரோஸி பள்ளி முன்பு மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்தனர். அவர்கள், புகார்தாரர் மற்றும் அவர் நண்பர்களை சட்டவிரோதமாக தடுத்தனர். 1–ஆம் எதிரியான மணி, சோமனை கத்தியால் குத்தினார். எதிரி–2. ரத்னகுமார், புகார்தாரரின் முகத்தில் வடிவாளால் தாக்கினார், எதிரி–3 பிரவீன், அசா–3 அஷரஃப்பிற்கு இரும்புக்கம்பியால் அடிகள் கொடுத்தார்.

4. வடக்கஞ்சேரி காவல் நிலையத்தின் காவல் துறை உதவி ஆய்வாளர் வி. பழனிமாலா, வாக்குமூலத்தை பதிவு செய்து, புலன் விசாரணையை மேற்கொண்டார். அவர், அசா2–விஸ்வநாதனின் வாக்குமூலத்தை, குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 161–ன் கீழ் பதிவு செய்தார். அவர் காவலருக்கு அளித்த வாக்குமூலத்தில் 28–09–2005 இரவு சுமார் 8.00 மணியளவில், 2. கபீர், த/பெ. முகம்மது,

3. அஷ்ரப், த/பெ ஷெரி, 4. சோமன் த/பெ அப்புண்ணி 5. ராஜேஷ், த/பெ கருமன் 6. அனில் குமார் த/பெ. வேலாயுதன் 7. சஜீஷ், 8. சனோஜ், த/பெ குமரன் வடக்கத்தொடியில், ஆகியோர் மங்களம் பழைய போஸ்ட் ஆபீஸ் அருகே நின்று கொண்டிருந்தனர். அவர்கள், தேர்தலில் கட்சியின் வெற்றியை பற்றி பேசிக்கொண்டிருந்தனர். சோழியங்கோட்டில் பி.ஜே.பி. மக்கள் பிரச்சினை செய்ததான தகவலை அவர்கள் அறிந்தனர். அவர்களில் 8 பேர் சோழியங்கோட்டிற்கு சென்றனர். அவர்கள் ரோசி பள்ளிக்கு முன் உள்ள ரோட்டின் சரிவை அடைந்தபொழுது, எதிற்புறத்திலிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வருவதைக் கண்டனர். இரண்டு மோட்டார் சைக்கிள்களும் நின்றது. டார்ச் வெளிச்சத்தில் பார்த்தபொழுது, நான்கு எதிரிகள் வடிவால், கத்தி மற்றும் இரும்பு கம்பியுடன் தங்களை நோக்கி ஓடி வருவதைக் கண்டனர். சி.பி.எம். தொழிலாளியான 1–ஆம் எதிரி மணி, அவனை வெட்டி கொல்லுங்க என்று கத்திக்கொண்டே சோமனின் நெஞ்சில் கத்தியால் குத்தினார். அவர் அவனை தடுத்தபொழுது 2–ஆம் எதிரியான ரத்னகுமார் அவரை வடிவாளால் தாக்கினார், ஆனால் அவர், அவரது தலையை பின்னால் இழுத்ததன் காரணமாக, உடைவாள் அவரது வலது கன்னத்தில் பட்டது. இரண்டாவது தாக்குதல் மூக்கில் பட்டது. அவர், எதிரி எண்–3–பிரவீன் தன் கையில் பெரிய பொருளுடன் அ.சா–3 அஷரப்பை நோக்கி வருவதைக் கண்டார், அவர்கள் எட்டு பேருமே

காயமடைந்ததாக கூறினார். கூச்சலை கேட்டு, மணிகண்டன், த/பெ மாதவன், வடக்கேதாரா புழக்கல் பரம்பு, சிஜு, த/பெ சாமுன்னி, வடுக்கத்தோடி ஆகியோர் ஓடி வந்தனர், ஆனால் தாக்கியவர்கள் ஓடி விட்டனர். காயமடைந்தவர்கள் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவர், சோமனை இறந்த பிறகே கொண்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ளார், இருந்தபோதிலும், அவரும் ராஜேஷும் கடுங்காயம் அடைந்தனர். விசாரணை முடிவில், இ.த.ச., பி. 212 உ/இ பி.34–ன் கீழான குற்றச்சாட்டுக்களின் பேரில் வினோத், மோகனன் மற்றும் செல்லராஜ் ஆகிய மூவர் உட்பட 7 நபர்கள் விசாரிக்கப்பட்டனர். பின்னர் இந்த மூன்று நபர்கள் விசாரணை நீதிமன்றத்தால் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

5. கற்றறிந்த விசாரணை நீதிமன்றமானது 24–11–2011 தேதியிடப்பட்ட தனது தீர்ப்புரை மூலம், இ.த.ச., பிரிவு 341 உடனிணைந்த பிரிவு 34–இன்கீழ் 1 முதல் 4 வரையிலான எதிரிகளுக்கு ஆயுள் தண்டனையம், ஒரு மாத கால சாதாரண சிறைத்தண்டனையையும் வழங்கியதுடன், இ.த.ச., பிரிவு 324 உடனிணைந்த பிரிவு 34–ன்கீழ் ஆறு மாத காலத்திற்கு கடுஞ்சிறைத் தண்டனையும் வழங்கியது.

6. அரசுத் தரப்பு வழக்கு முழவதும், காயமுற்ற சாட்சிகள், அ.சா.2–விஸ்வநாதன், அ.சா.3–அஷரஃப் அலி, அ.சா–10. ராஜேஷ் மற்றும் அ.சா–13.அனில் குமார் ஆகியோரை சார்ந்திருக்கிறது.

மேல்முறையீட்டாளர் மணியின் கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் வாதம் என்னவென்றால், 28.9.2005 அன்று நடந்த சம்பவத்தில் மேல்முறையீட்டாளர் காயம் அடைந்துள்ளார் என்பது பி.சா.ஆ–2–ன் காய அறிக்கையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் அவர், இரவு சுமார் 7.30 மணியளவில் அ.சா–2 விஸ்வநாதன், முகம்மது அலி, மணிகன்டன், அ.சா 3 – அஷரப் மற்றும் 30 நபர்களால் கம்பினால் அடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். காயமானது, நெற்றியில் சுமார் 5 செ.மீ. அளவில் ரத்தப்போக்குடன் கூடிய கிழிந்த காயம் மற்றும் கன்றிய காயமும் ஆகும். மேல்முறையீட்டாளர் தனது தற்காப்புரிமைக்காக செயல்பட்டுள்ளதால், அவரை இ.த.ச. பி. 302–ன் கீழான குற்றத்திற்கு தண்டித்ததை நிலைநிறுத்த முடியாது என்று வாதுரைக்கப்பட்டது.

7. சோழியங்கோட்டின் பஞ்சாயத்து தேர்தலில், சி.பி.எம்–ன் வெற்றியை பட்டாசு வெடித்து கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, பி.ஜே.பி தொழிலாளர்களில் ஒருவரின் புடவை தீப்பற்றிக் கொண்டதால், சோழியங்கோட்டில் கலவரம் நிலவி வந்ததது என்ற தகவல் கிடைத்ததின் பேரில், பாதிக்கப்பட்ட எட்டு நபர்கள் சோழியங்கோட்டை நோக்கி விரைந்தனர் என்பதே அரசு தரப்பு வழக்கின் வாதமாகும். எனினும், சோழியங்கோட்டில் எந்த குழப்பமும் நடந்ததாக அரசு தரப்பில் சாட்சி எதுவும் அளிக்கப்படவில்லை என வாதிடப்பட்டது. மேற்கூறிய

பகுதியிலிருந்து சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. அவர்களது வாக்குமூலத்தின்படி, சாட்டுரைக்கப்பட்ட எட்டு பாதிக்கப்பட்டவர்கள் சோழியங்கோட்டிற்கு சென்றதாக கூறப்படுகிறது. சோழியங்கோட்டை நோக்கி பாதிக்கப்பட்டவர்களின் கூட்டம் சென்று கொண்டிருக்கிறது என்ற சங்கதியை கருத்தில் கொள்ளாமல் எதிரிகள் மோட்டார் சைக்கிள்களை ஓட்டிக்கொண்டிருந்தனர் என்று சமர்ப்பிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோர் அதிக எண்ணிக்கையில் இருந்ததாலும், திடீரென்று எதிரியிடம் சண்டையிட்டதாலும், மேல்முறையீட்டாளர் தன்னை காப்பாற்றிக்கொள்ள முயன்றிருக்கிறார்.

8. மாறாக, தற்காப்புரிமையின் பலன் மேல்முறையிட்டாளருக்கு அளிக்கப்படவில்லை என்றாலும், இது முன்திட்டமேதுமின்றி திடீர் சண்டை ஏற்பட்டவழக்காகும், எனவே இ.த.ச பிரிவு 302–ன் கீழான குற்றத்திற்கு மேல்முறையீட்டாளரை தண்டித்தது நிலைநிறுத்த தக்கதல்ல என்று வேறுவிதமாக வாதுரைக்கப்பட்டது. இது இ.த.ச. பிரிவு 304, பகுதி–II–ன் கீழான குற்றத்திற்கு தண்டிக்கத்தக்க வழக்காகும்.

9. மாறாக, மேல்முறையீட்டாளர் – மணியின் ஆலோசனையின் பேரில், அவர்கள் பாதிக்கப்பட்டோரை தாக்கினார்கள் என்பதற்கு அனைத்து காயம்பட்ட சாட்சிகள் போதுமானதாக இருக்கிறது என்று அரசிற்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதிட்டார். மேலும் அரசிற்காக

முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், 2 முதல் 4 வரையிலான எதிரிகள், பாதிக்கப்பட்டோரை வடிவால், கத்தி மற்றும் இரும்பு கம்பி ஆகிய ஆயுதங்களால் தாக்கிய தாக்குதல் நடத்தியவர்களில் உள்ளவர்களாகும் என்று வாதுரைத்தார். அனைத்து எதிரிகளும் ஒன்றாக இருசக்கர வாகனத்தில் வந்து காயம் ஏற்படுத்தி, ஒன்றாகவே ஓடிவிட்டனர் என்பதே இவ்வழக்கின் பொது உட்கருத்தாகும். பாதிக்கப்பட்டவரை கொலை செய்யும் உட்கருத்து எதிரிக்கு இருந்தது என்பதை தெளிவாக நிரூபிப்பதற்கான சூழ்நிலைகளின் அடிப்படையில் பொது உட்கருத்தானது ஊகிக்கப்படவேண்டும்.

10. பொது உட்கருத்தானது, உணர்ச்சி வேகத்தில் எழக்கூடியது; எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவர் ரோஸி பள்ளி அருகே நெருங்கியபோது, அவர்களுக்கு பொது உட்கருத்து இல்லாது இருக்கலாம் என்பது அவசியமானதல்ல, ஆனால் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களை கண்டபோது, பாதிக்கப்பட்டவர்களை அவர்கள் தாக்க தீர்மானித்ததால், அத்தகைய தாக்குதல் பொது உட்கருத்துடனே உருவாக்கப்பட்டது என்று வாதுரைக்கப்பட்டது.

11. காயங்கள் குறித்த சாட்சிகளின் வாக்குமூலம் பொருத்தமானதாக இல்லை என்பதை நாங்கள் காண்கிறோம். மணி, இறந்த சோமனை அடித்தார் மற்றும் அவர் மற்றவர்களை தாக்கும்படி தூண்டினார் என்று மற்ற சாட்சிகள் ஒரே போன்று

சான்றுரைத்திருந்தாலும், அ.சா.2– விஸ்வநாதன் காவல் துறையிடம் அளித்த வாக்குமூலத்தின்படி, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சோழியங்கோடு பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தினர் என்பதாகும். விஸ்வநாதன் அ.சா–2 ஆக சாட்சி கூறியபொழுது, இரண்டு மூன்று நபர்கள் வந்து, பிஜேபி ஆதரவாளர்கள் பிரச்சினை செய்யததாக கூறினார். குறுக்கு விசாரணையில் அ.சா–2 "புடவை எரிந்த" சம்பவம், கேள்விப்பட்ட ஒன்று என்று ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா–3 அஷ்ரஃப் அலி, தாங்கள் ரோசி பள்ளியின் சரிவிற்கு அருகே நின்று கொண்டிருந்தபோது, இரண்டு மூன்று நபர்கள் சோழியங்கோட்டிலிருந்து வந்து, பி.ஜே.பியின் கொடி காணவில்லை என்றும் பி.ஜே.பி மக்கள் பிரச்சினை ஏற்படுத்துகின்றனர் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார். அவர்கள், மேற்கு திசையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வந்து கொண்டிருப்பதை பார்த்தபொழுது, பிரச்சினை என்னவென்பதை உறுதியாக அறிந்து கொள்வதற்காக, மேற்கூறிய இடத்திற்கு நடந்து சென்றார்கள். புடவை எரிந்து போனதன் காரணமாகவோ அல்லது பிஜேபி கொடி காணாமல் போனதன் காரணமாகவோ சோழியங்கோட்டில் எந்த நபரால் பிரச்சனை ஏற்பட்டது என்பதை குறித்து எவரும் விசாரிக்கப்படவில்லை.

12. முதல் தகவல் அறிக்கையில் ,அ.சா.3– அஷரஃப்பை, 3–ஆம் எதிரி பிரவீன் இரும்பு கம்பியால் தாக்கினார் என்று கூறப்பட்டது; அவ்வாறிருக்கையில், 2–ஆம் எதிரி ரத்னகுமார்

வடிவாளால் புகார்தாரரை தாக்கியதாக கூறப்படுகிறது. ஆனால், அ.சா.3 அஷரஃப் அலி தனது சாட்சியத்தில், 2–ஆம் எதிரி ரத்னகுமார் தன்னை தனது மூக்கிலும், இடது கையிலும் மற்றும் இடது தோள்பட்டையிலும் தாக்கியதாக சான்றுரைத்தார், அவ்வாறிருக்கையில், 4–ஆம் எதிரி செல்வராஜ் கிரிக்கெட் ஸ்டம்ப்பால் தன்னை தாக்கியதாக கூறியுள்ளார்.

13. 2–ஆம் எதிரி ரத்னகுமார், அ.சா–2 விஸ்வநாதன் மீது காயம் ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது, ஆனால் 2–ஆம் எதிரி ரத்னகுமார் அ.சா–3 அஷ்ரஃப் அலி மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையில் 4–ஆம் எதிரி செல்வராஜ் தனது கையில் கிரிக்கெட் ஸ்டம்பை வைத்து இருந்ததற்கான சாட்டுரை ஏதுமில்லை.

14. அ.சா.10 ராஜேஷ் தனது வாக்குமூலத்தில், 1–ஆம் எதிரி மணி, 3–ஆம் எதிரி பிரவீன் மற்றும் 2–ஆம் எதிரி ரத்னகுமார் தங்கள் கைகளில் கத்திகள் வைத்து இருந்ததாகவும், செல்வராஜ் என்பவர் கிரிக்கெட் ஸ்டம்பை வைத்து இருந்ததாகவும் கூறியதை தவிர, மற்றவற்றை, மற்ற இரண்டு சாட்சிகளைப் போலவே, அதே முறையில் வாக்குமூலம் அளித்துள்ளார். 3–ஆம் எதிரி பிரவீன் தன்னை தன் இடது கையில், ஆள்காட்டி விரலில் மற்றும் நெஞ்சில் கத்தியால் குத்தியதாகவும், தான் திரும்பிய பொழுது, இடது தோள்பட்டையிலும் முதுகிலும் குத்தியதாக கூறியுள்ளார். சம்பவ இடத்தில் பாதிக்கப்பட்டோர் நின்று கொண்டிருந்தனர் என்று

பி.ஜே.பி மக்களுக்கு தெரியுமா என்று தனக்கு தெரியாது எனக் கூறியுள்ளார்.

15. அ.சா–13–அனில் குமார், தனது வாக்குமூலத்தில் 2–ஆம் எதிரி– ரத்னகுமார் தன் கையில் கத்தி வைத்திருந்தார் என்றும் தனது இடது நெற்றியில் காயம் ஏற்படுத்தினார் என்றும் 4–ஆம் எதிரி செல்வராஜ் தன்னை கிரிக்கெட் ஸ்டம்பால் அடித்தார் என்றும் சான்றுரைத்தார். அத்தகைய சான்று மற்றும் அ.சா.8– டாக்டர் பி.சி இக்னேஷியஸ் அவர்களால் அளிக்கப்பட்ட பி.சா.ஆ–1 சடலக் கூராய்வு சான்றிதழின் அடிப்படையிலும், அந்த குழப்பம் ஏற்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் காயமுற்றனர் என்பதை தவிர இ.த.ச., பிரிவு 34–ன் உதவியுடன் 2 முதல் 4 வரையிலான எதிரிகளை தண்டிப்பதற்கான எந்த காரணமும் இல்லை என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. உயர் நீதிமன்றம், தரம் பால் மற்றும் பலர் –எதிர்– ஹரியானா மாநில அரசு, ஏ.ஐ.ஆர். 1978 எஸ்.சி. 1492 மற்றும் நந்த கிஷோர் –எதிர்– மத்திய பிரதேச மாநில அரசு, ஏ.ஐ.ஆர். 2011 எஸ்.சி. 2775 எனும் வெளியிடப்பட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை சார்ந்திருந்தது.

16. நான்கு காயமுற்ற சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்ககையில், பிஜேபி ஆதரவாளர்கள் குழப்பம் ஏற்படுத்தியதை கேட்ட அச்சாட்சிகள் ஏற்கனவே சோழியங்கோட்டிற்கு செல்ல முடிவு செய்துள்ளதாகவும், ஆனால் அப்பொருண்மை, மற்ற கூட்டத்திலுள்ளவர்களை கொல்வதற்கான பொது உட்கருத்தாக

விளங்காது எனவும் உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. உயர் நீதிமன்றம் பின்வரும் காண்முடிவுகளை பதிவுசெய்தது:

"54 கீழமை நீதிமன்றத்தின் காண்முடிவினை ஏற்பது மிகவும் கடினமாக உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தீர்ப்புரைகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள கோட்பாடுகளை சார்ந்தும், அதில் வகுத்துரைக்கப்பட்டுள்ளதை பயன்படுத்தியும், எதிரிகளின் பொது உட்கருத்திற்கு மேலாக மரணம் விளைவிக்கும் காயம் ஏற்படுத்தப்பட்டது என்ற முடிவுக்கு வருவது சிரமமாக உள்ளது.

55.முதலில் பி.ஜே.பி ஆதரவாளர்களால் எந்த குழப்பம் ஏற்படுத்தப்பட்டது என்று கண்டறிய பாதிக்கப்பட்டவர்கள் சோழியம்கோட்டிற்கு வருவார்கள் என்பது குறித்தும், அந்த குழுவில் சோமன் வருவார் என்பது குறித்தும் எதிரிகள் அறியவில்லை. இரண்டு கோஷ்டியினரும் முரண்பட்டிருந்தனர் என்பது உண்மை. அதற்காக ஒரு கோஷ்டியினர் மற்றொரு கோஷ்டியினரை கொலை செய்யும் பொது உட்கருத்தில் இருந்தனர் என்று சொல்ல முடியாது.

56. அரசு தரப்பு நிகழ்வுகளின் வரிசைப்படியும்கூட, சோமன் மீது முதல் எதிரியால் செய்யப்பட்ட கத்திக்குத்து திடீரென்று புரியப்பட்ட செயல் என்றும், அச்செயல் மற்ற எதிரிகளின் பொதுவான நோக்கத்தை முன்னெடுத்துச் சென்றதாகும் என்ற முடிவுக்கு வர எந்த ஆதாரமும் இல்லை என்பதாகும்.

பொதுவாக சாட்சியத்திலிருந்து, மற்ற எதிரிகளான 2, 3 மற்றும் 4 ஆகியோர், முதல் எதிரியின் அச்செயலை எதிர்பார்க்கவில்லை என்றும் அவர்கள் முதல் எதிரியின் இச்செயலால் அதிர்ச்சியுற்றனர் எனவும் தெரிகிறது. பாதிக்கப்பட்டவர்களின் குழுவினரை விட எண்ணிக்கையில் அதிகமாக இருந்த குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அவர்களிடமிருந்து தாக்குதலை உணர்ந்திருக்கலாம் என்று தோன்றுகிறது, அதுவே தாக்குதல் செய்தவர்களின் குழு கத்தியை காட்டி பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்தினர் என்று அ.சா. – 2, 3, 10 மற்றும் 13 ஆகியோர் கூறியதற்கான காரணமாகும். அ.சா. 2,3,10 மற்றும் 13–ன் மேல் காயங்கள் ஏற்பட்டது என்ற சங்கதியை இந்நீதிமன்றம் கவனிக்கத் தவறவில்லை.

**** **** ****** ******

59.சோமனின் மீது மரணம் விளைவிக்கும் கத்திக்குத்தை ஏற்படுத்திய 1–ஆம் எதிரியின் செயலானது, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக 1 முதல் 4 வரையிலான எதிரிகளின் பொது உட்கருத்தின் முன்னேற்றமாகும் என்ற கீழமை நீதிமன்றத்தின் காண்முடிவை ஏற்பது மிகவும் கடினமாக உள்ளது. வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளில் இருந்து, இ.த.ச., பிரிவு 34–ன்

துணை கொண்டு 2 முதல் 4 வரையிலான எதிரிகளை தண்டிப்பது என்பது தவறான ஒன்றாகும்."

17. மேல்முறையீட்டாளர் – மணியால் ஏற்பட்ட முதல் காயம் எதிரிகளின் பொது நோக்கின் விளைவாக ஏற்பட்டது என கூறமுடியாததால், காயமுற்ற சாட்சிகள் மீது ஏற்படுத்தப்பட்ட காயம் பொது நோக்கின் நிறைவேற்றுகை என்று கூறமுடியாது என்று உயர்நீதிமன்றம் கண்டறிந்தது. சாட்சிகள் காயமுற்றிருந்தாலும் காயங்கள் கடுமையானதல்ல என்று உயர்நீதிமன்றம் கருதுகிறது.

18. சோமனுக்கு மரணத்தை ஏற்படுத்தியதில் எந்த பொது நோக்கும் இல்லை என்று உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் நாங்கள் பிழை ஏதும் காணவில்லை. சம்பவம் நடந்த இடமான சோழியங்கோட்டில், எதிரிகள் இருந்ததாகவோ அல்லது அவர்கள் அந்த இடத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கான எந்த ஆதாரத்தையோ அரசு தரப்பு முன்வைக்கவில்லை. அவ்விடத்தில் பட்டாக வெடித்து புடவை எரிந்த சம்பவமோ அல்லது கொடி காணாமல் போன சம்பவமோ ஏற்பட்டதற்கு எந்த சாட்சியமும் முன்னிடப்படவில்லை. எனவே அரசு தரப்பால் தகராறின் தொடக்கம் நிரூபிக்கப்படவில்லை.

19. பாதிக்கப்பட்டவர்கள் எட்டு நபர்கள் என்றும், பஞ்சாயத்து தேர்தலில் அவர்களது கட்சியின் வெற்றியை கொண்டாடும் மனநிலையில் இருந்தனர் என்பதால், அவர்கள் சோழியம்கோடு

பகுதிக்கு செல்ல தீர்மானித்தனர். எதிரிகள் தீடீரென்று எதிர் திசையிலிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்தனர். எதிரிகளில் ஒருவர் காயமடைந்தார், இக்கூற்று சாட்சிகளில் ஒருவரான அ.சா 2– விஸ்வநாதன் என்பவராலும் ஏற்கப்பட்டது.

20. அது அவ்வாறிருக்கையில், மேல்முறையீட்டாளரால் சோமனின் மரணம் ஏற்பட்டது என்று அனைத்து காயமுற்ற சாட்சிகளும் ஒருங்கியல்வாக சான்றுரைத்துள்ளனர் என்ற பொருண்மையும் நிலவுகிறது. மேல்முறையீட்டாளர் அடைந்த காயம் கடுமையானதல்ல, எனவே, அத்தகைய காயம் மரணத்தை விளைவிக்கும் என்பதால் முக்கிய பகுதியான மார்பில் மரணமுற்றவரை அவர் தாக்கியிருக்க முடியாது. தேவையான அளவு தீங்கு எற்படவில்லை. எனவே தற்காப்புரிமையின் உரிமையை செயல்படுத்துவதற்கு தேவையான அளவை விட மேல்முறையீட்டாளர் அதிக காயம் ஏற்படுத்தி உள்ளதால், தற்காப்புரிமையின் உரிமைக்கு அவர் உரியவரல்ல. எனவே மேல்முறையீட்டாளர் தற்காப்பிற்காக செயல்பட்டார் என்ற வாதுரை நிறுவப்படவில்லை.

21. எனினும், மேல்முறையீட்டாளர் சம்பவ இடத்தில், மேற்கு திசையிலிருந்து மோட்டார் சைக்கிள் ஓட்டிக்கொண்டு வந்தார். பாதிக்கப்பட்டவர்கள் சோழியங்கோட்டை நோக்கி சென்றனர் என்பதை குறித்து எதிரிகளுக்கு தெரியவோ அல்லது அறியவோ இல்லை. எதிரிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையே

அரசியல் முரண்பாடை தவிர தனிப்பட்ட விரோதம் ஏதும் இல்லை என்றும், மேல்முறையீட்டாளர் பாதிக்கப்பட்டோரை திடீரென்று எதிர்கொண்டார் என்றும், அப்போது ஏற்பட்ட சண்டையினால் இறந்தவர் மீதும், மற்ற பாதிக்கப்படவர்கள் மீதும் காயங்கள் ஏற்பட்டது என்று அரசு தரப்பு சாட்சிகள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

22. முன்திட்டமிடுதல் ஏதுமின்றி ஏற்பட்ட திடீர் சண்டையை கருத்தில் கொண்டு பார்க்கையில், இ.த.ச., பிரிவு 302 – ன் கீழான குற்றத்திற்கு மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை நிரூபிக்கப்படவில்லை. இறந்துபோன சோமனின் மார்பில் கத்திக்குத்து ஏற்பட்டதன் காரணமாகவே அவருக்கு மரணம் ஏற்பட்டது. அவ்வாறான காயம், மரணம் விளைவிக்கும் உட்கருத்து ஏதுமின்றி, மரணம் ஏற்படுத்தக்கூடும் என்று அறிந்தே புரியப்பட்டது. எனவே, திடீர் சண்டையின் காரணமாக ஆத்திரமடைந்து ஏற்பட்ட மரணம் இ.த.ச., பிரிவு 300 விதிவிலக்கு 4–ன் கீழ் வருகின்ற கொலைக்குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றமாகும். எனவே, அது இ.த.ச., பகுதி I பிரிவு 304–ன் கீழான தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

23. மேல்முறையீட்டாளர், விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையில் ஏழு வருடங்களுக்கு மேல் அனுபவித்துள்ளார் என்று சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, நிகழ்ந்த சம்பவத்தின் பின்புலம் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு

பார்க்கையில், மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தண்டனையானது, ஏற்கனவே அனுபவித்துள்ள தண்டனையை மாற்றியமைக்கும்படியும், ரூ.20,000/–திற்கான அபராதத்தை நிலைநிறுத்தும்படியும் நாங்கள் முடிவு செய்கிறோம்.

24. மேற்கூறிய வாதங்களை கருத்தில் கொண்டு மேல்முறையீட்டாளார் – மணி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.540/2019 பகுதியாக அனுமதிக்கப்படுகிறது மற்றும் கேரளா மாநிலஅரசால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண் 541/2019 தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடுகள் தீர்வு செய்யப்படுகின்றன.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."